**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.31/2020 – P.W.9**

Deposition of witness for Prosecution:

Name : திரு.அஸ்லாம் Father's Name.ஜாபர்

Village : வெளிபாளையம் வயது.29

Date : 19.03.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 19.03.2025.

**( 2 முதல் 4, 6 முதல் 9, 11, 14 முதல் 26, 28 முதல் 30, 33, 34, 36 முதல் 39, 41 முதல் 44, 47, 48, 51 மற்றும் 52 ஆகிய எதிரிகள் ஆஜர். 5, 32, 35, 40, 46 மற்றும் 50 ஆகிய எதிரிகள் ஆஜராகவில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றிந்த வழக்கறிஞர்கள் ஆஜராக அனுமதிக்கவேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317ன் கீழான மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

சம்பவம் நடந்தாக சொல்லப்படும் மறுநாள் தான் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக தலைஞாயிறு காவல் நிலைய தலைமை காவலர்தான் விசாரணை செய்தார். பின்னிட்டு சாட்சி சம்பவம் நடந்த அன்று அரசு மருத்துவமனையில் வைத்து தலைமைக் காவலரும், அவரை தொடர்ந்து அன்றே உதவி ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியோர்கள் என்னை விசாரணை செய்தார்கள், அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்வதற்கு முன்பாக தலைஞாயிறு பகுதிக்கு முன்பு உள்ள வேட்டைக்காரனிருப்பு பகுதியில் அப்போதைய கைத்தறித் துறை அமைச்சர் ஓ. எஸ். மணியன் இந்த பகுதிகளில் கஜா புயலால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று பத்திரிக்கையாளர்களிடம் பேட்டிக் கொடுத்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதனால்தான் பாதிக்கப்பட்ட நபர்கள் நிவாரணம் பெற வேண்டி தலைஞாயிறு பகுதிகளில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் ஒன்று கூடியிருந்தார்கள் என்று சொன்னால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட அந்த பகுதியில் உள்ளவர்கள் ஒன்று கூடியிருந்தார்கள்.

ஆனால் மேற்படி அமைச்சர் பேட்டி அளித்ததற்காகதான் ஒன்று கூடினார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று நாகப்பட்டினத்தில் இருந்து திருப்பூண்டி, பூவைத்தடி, வேட்டைக்காரனிருப்பு வழியாக சென்று வலது பக்கமாக திரும்பி தலைஞாயிறு பகுதிக்கு சென்றோம் என்றால் சரிதான். கஜா புயல் பாதிக்கப்பட்ட பின்னர், மூன்று நாட்கள் கழித்துதான் நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்று தலைஞாயிறு பகுதிக்கு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல, கஜா புயல் பாதிப்பு ஏற்பட்ட மறுநாளே சென்றோம். நாங்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் அளிக்க சென்றோமா அல்லது கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதாவது சாலைமறியலில் ஈடுபடுவதாக தகவல் அறிந்து சென்றோமா என்றால் அது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. காவல் கண்காணிப்பாளர் சென்றதால் அவருக்கு பாதுகாப்புக்காக சென்றோம். அந்த சமயத்தில் தலைகவசம், பாதுகாப்பு கவசம், லத்தி ஆகியவைகளுடன்தான் காவல் கண்காணிப்பாளருடன் நாங்கள் சென்றோம் என்று சொன்னால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு சென்ற நாங்கள் உடனடியாக அங்கிருந்த குழந்தைகள் உட்பட பெண்கள் மீது லத்தி சார்ஜ் செய்தோம் என்றும், எங்களுக்கு எந்தவித காயங்களும் அதில் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்ற சமயத்தில் கஜா புயலால் மரங்களால் எல்லாம் சார்ந்து, சாலைகள் பழுதுபட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். எங்கள் வாகனமும், காவல் கண்காணிப்பாளர் வாகனமும் சம்பவ இடத்திற்கு சென்றபோது, அங்கு நிவாரண பொருள் பெறுவதற்காக அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பேச்சுவார்த்தை நடத்தினார் என்று சொன்னால் சரிதான். அப்போது அந்த கூட்டத்தில் சுமார் 500 பேருக்கு மேல் இருந்தார்கள். அந்த கூட்டத்தில் யார் என்னை அசிங்கமாக பேசினார்கள், யார் என்னை அடித்தார்கள் என்று தெரியுமா என்றால் கூட்டமாக இருந்ததால் தெரியாது. கு.வி.மு.ச 161–ன் படியான வாக்குமூலத்தில் ஆஜர் எதிரிகளில் யார் என்னை அடித்தார்கள் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

மதியழகன், தேவா, முத்துக்குமார் ஆகிய எதிரிகள் இவ்வழக்கு எதிரிகளில் யார் என்று எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. சாலை மறியல் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கு ஒரு போலிரோ வாகனமும், அரசு பேருந்தும் இருந்ததா என்றால் இல்லை. இந்த சம்பவமானது தலைஞாயிறு கடை பகுதியில் நடந்ததா என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே நடந்தது. வேட்டைக்காரனிருப்பில் இருந்து தலைஞாயிறு கடைவீதிக்கு முன்பாக செல்லும் வழியில் எந்தவித போக்குவரத்தும் இல்லாததால், அந்த பகுதியில் சாலைமறியலில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது உயர் அதிகாரிகள் உத்தரவிற்கிணங்க நிவாரண பொருள் வேண்டி கூடியிருந்த குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட கூட்டத்தினர் மீது நாங்கள்தான் லத்தி சார்ஜ் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல, இந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், என்னை யாரும், தாக்கவும் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/– (G. கிருஷ்ணன்)
தலைமை நீதித்துறை நடுவர்
நாகப்பட்டினம்.